கர்த்தருடைய நாமத்தில் நான் ஒன்றை உங்களிடம் கூறினால் அது உண்மையாக... அவர் தான் அதை என்னிடம் கூறியிருப்பார்.

இதுவரைக்கும், இத்தனை ஆண்டு காலமாக, உலகம் முழுவதிலும் அது ஒருமுறையாவது தவறாக இருந்ததில்லை. ஏனெனில்... ஒரு மனிதன் அவ்வளவு பிழையற்றவனாக இருக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். அதை தேவனுடைய ஆவி மாத்திரமே செய்ய முடியும்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



செய்தி: 65-04-29E

# மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

**பரிசுத்த ஆவி திட்டவட்டமாக எனக்குத் தெரியப்படுத்தினால்...**

(சகோ. பிரான்ஹாம் அலாஸ்காவில்

நேர்ந்த நில நடுக்கத்தைக் குறிப்பிடுகிறார் – தமிழாக்கியோன்). உங்களில் சிலர், “சகோ. பிரான்ஹாமே, அது இங்கு நேரிடுமா?” என்று கேட்டீர்கள். அதைக் குறித்து எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியவே தெரியாது. எனக்குத் தெரியும் வரைக்கும்... அது உண்மை. **உங்களிடம் எப்பொழுதுமே உண்மையாயிருக்க விரும்புகிறேன்.**

**ஏதோ ஒன்றை ஊகித்தோ, அல்லது ஏதோ ஒரு கருத்தை எடுத்துக் கொண்டோ, இப்படி**

**நம்புகிறேன் என்று கூறப் போவதில்லை.** உங்களிடம் எடுத்துரைப்பேன். பூமி முழுவதுமே நிலநடுக்கம் ஏற்படும் நிலையில் உள்ளது. நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம். நான் எப்பொழுதும் முயன்று வந்துள்ளேன்...

7. இன்று காலை சகோ. ஷகரியான் என்னிடம், அவர் எவ்வாறு ஜெப வரிசைகளின் வழியாக சென்று, ஜனங்கள் மேடைக்கு வருவதற்கு முன்பு அவர்களுடைய ஜெப அட்டைகளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதைப் படித்து, அவர்கள் ஜெப

அட்டைகளில் எழுதினதையே நான் கூறினேனா என்று ஒப்பிட்டுப் பார்த்ததாக கூறிக் கொண்டிருந்தார். அவர்கள் ஜெப அட்டைகளில் என்னவெல்லாமோ எழுதுகின்றனர். அது சரியாயுள்ளதா என்று அவர் பரிசோதித்து பார்த்தார். அவர் அவ்வாறு பரிசோதித்த நூற்றுக் கணக்கானவைகளில், ஒன்றாகிலும் தவறாயிருக்க முடியாது. பாருங்கள், ஏனெனில் அது... அது தேவனாயுள்ள வரைக்கும். அதில் என்னை நான் மிகைப்படுத்திக்

**கொண்டால், அது தொடக்கத்திலேயே தவறாகிவிடும்.**

இங்கு அமர்ந்து என்னைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒருவருடைய சிறு மகள் அண்மையில் என்னிடம் வந்தாள். அவள் ஒரு சொப்பனம் கண்டாள். அவள், “சகோ. பிரான்ஹாமே, இந்த சொப்பனத்தின் அர்த்தம் என்ன?” என்று கேட்டாள்.

நான் “சகோதரியே, எனக்குத் தெரியாது. அதன் அர்த்தத்தை கர்த்தர் என்னிடம் உரைப்பாரா என்று நான் பார்க்க வேண்டும்”

என்றேன். நான் கர்த்தரைக் கேட்ட போது, அவர் என்னிடம் கூறவேயில்லை.

அந்த பெண் மறுபடியும் என்னிடத்தில் வந்து, "சொப்பனத்தின் அர்த்தத்தைக் கூறுங்கள்" என்றாள்.

நான் "தேனே, இங்கு வந்து உட்காரு. உன் பெற்றோர் எனக்கு நெருங்கிய நண்பர்கள். உன் தந்தை ஓய்வு பெற்ற பின்பு, அவர்கள் கனடாவிலிருந்து புறப்பட்டு வந்து, இங்கு என்னுடன் தங்குகின்றனர். நான் கூறுவதை அவர்கள் விசுவாசிக்கின்றனர். என்

வாழ்க்கையில் நான் வேண்டுமென்று தவறான ஒன்றை யாரிடத்திலும் கூறினதில்லை. அந்த சொப்பனத்தின் அர்த்தம் எனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். **ஆயினும் நானே அந்த சொப்பனத்தை தரிசனத்தில் கண்டு அதன் அர்த்தத்தை அவர் என்னிடம் கூறும் வரைக்கும், நான் உன்னிடம் கூறமுடியாது. நானே ஏதோ ஒன்றை கற்பனை செய்து உன்னிடம் கூறமுடியாது.** நானே ஏதோ ஒன்றை கற்பனை செய்து உன்னிடம்

கூறுவேனானால், ஜீவனுக்கும் மரணத்துக்கும் இடையே ஒருக்கால் நான் உனக்கு அவசியப்பட்டால், அப்பொழுது நான் கூறுவதை நம்பலாமா வேண்டாமா என்று சந்தேகிக்கும் நிலை ஏற்பட்டு விடும்'' என்றேன்.

8. **கர்த்தருடைய நாமத்தில் நான் ஒன்றை உங்களிடம் கூறினால் அது உண்மையாக... அவர் தான் அதை என்னிடம் கூறியிருப்பார்.**

**இதுவரைக்கும், இத்தனை ஆண்டு காலமாக, உலகம் முழுவதிலும் அது**

**ஒருமுறையாவது தவறாக இருந்ததில்லை ஏனெனில்... ஒரு மனிதன் அவ்வளவு பிழையற்றவனாக இருக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். அதை தேவனுடைய ஆவி மாத்திரமே செய்ய முடியும்.**

